**செய்தி வெளியீடு எண்: 666** **நாள்: 01.10.2019**

**செய்தி வெளியீடு**

வரும் ஆயுதபூஜை மற்றும் தீபாவளி ஆகிய பண்டிகைகளுக்கு போக்குவரத்துத்துறையின் சார்பில் மேற்கொள்ளவிருக்கும் கூடுதல் சிறப்பு ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டமானது **மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர்** அவர்கள் தலைமையில் இன்று (01.10.2019) தலைமைச் செயலகக் கருத்தரங்கு கூடத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசிபெற்ற இந்த அரசின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும், முக்கிய பண்டிகைகளான தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய விழா காலங்களில் பொதுமக்கள் பாதுகாப்புடன், நல்ல முறையில் தங்களின் சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்பிட ஏதுவாக, போக்குவரத்துத்துறையின் சார்பில் போதிய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு, கூடுதலான பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகிறது. இது பொதுமக்களிடையே நல்ல வரவேற்பினையும் பெற்றுள்ளது. அந்த வகையில், வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு போக்குவரத்துத்துறையின் சார்பில், மேற்கொள்ளப்படும் சிறப்பு ஏற்பாடுகள் குறித்து, **மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர்** அவர்கள் தலைமையில் கடந்த 19.09.2019 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு, கூடுதல் பேருந்துகள் இயக்குவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் (CMBT) கோயம்பேடு, தாம்பரம் சானிடோரியம் பேருந்து நிலையம், தாம்பரம் இரயில் நிலைய பேருந்து நிறுத்தம், மாதவரம் புதிய பேருந்து நிலையம், பூவிருந்தவல்லி பேருந்து நிலையம் மற்றும் மாநகரப் போக்குவரத்துக் கழக கே.கே. நகர் பேருந்து நிலையம் ஆகிய 5 இடங்களிலிருந்தும் வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு 24/10/2019 முதல் 26/10/2019 வரையில் மேற்கூறிய இடங்களிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,225 பேருந்துகளுடன் சிறப்பு பேருந்துகளாக 4,265 பேருந்துகள் என மூன்று நாட்களும் சேர்த்து ஒட்டு மொத்தமாக, சென்னையிலிருந்து 10,940 பேருந்துகளும் இயக்கப்படும். பிற ஊர்களிலிருந்து மேற்கண்ட மூன்று நாட்களுக்கு 8,310 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன. மேலும், மேற்கண்ட நாட்களில் திருப்பூர் மற்றும் கோயம்புத்தூரிலிருந்து சேலம், மதுரை, திருச்சி, தேனி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களுக்கு முறையே 1165 மற்றும் 920 பேருந்துகள் இயக்கப்படும். மேற்கண்ட நாட்களில் பெங்களூரிலிருந்து சேலம், திருவண்ணாமலை, வேலூர், சென்னை, கரூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களுக்கு 251 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், முதன்முறையாக வரும் ஆயுதபூஜை பண்டிகையை முன்னிட்டு, தொடர் விடுமுறையில் சென்னையிலிருந்து தங்களது சொந்த ஊர்களுக்கு பொதுமக்கள் சென்றுவர ஏதுவாக சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள விவரம் பின்வருமாறு:-

## 2019 ஆயுதபூஜை சிறப்புப் பேருந்துகள் இயக்கம்

**(04.10.2019 (வெள்ளிக்கிழமை) முதல் 06.10.2019 (ஞாயிற்றுக்கிழமை) வரை பின்வரும் பேருந்து நிலையங்களிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,225 பேருந்துகளுடன் சிறப்பு பேருந்துகளாக 1,695 பேருந்துகள் என மூன்று நாட்களும் சேர்த்து மொத்தமாக, சென்னையிலிருந்து 6,145 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. மேலும், திருப்பூரிலிருந்து பிற ஊர்களுக்கு 280 பேருந்துகளும், கோயம்புத்தூரிலிருந்து பிற ஊர்களுக்கு 717 பேருந்துகளும், பெங்களூரிலிருந்து பிற ஊர்களுக்கு 245 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.)**

| வ.எண் | பேருந்து நிலையம் | இயக்கப்படும் பேருந்துகள் |
|---|---|---|
| 1. | மாதவரம் புதிய பேருந்து நிலையம் | ஆந்திரா மார்க்கம் செல்லும் பேருந்துகள் |
| 2. | கே.கே. நகர் மாநகர போக்குவரத்துக் கழக பேருந்து நிலையம். | ECR வழியாக புதுச்சேரி, கடலூர் மற்றும் சிதம்பரம் செல்லும் பேருந்துகள். |
| 3. | தாம்பரம் இரயில் நிலையப் பேருந்து நிறுத்தம் | திண்டிவனம் மார்க்கமாக திருவண்ணாமலை செல்லும் பேருந்துகள் மற்றும் போளூர், சேத்பட்டு, வந்தவாசி, செஞ்சி மார்க்கமாக செல்லும் பேருந்துகள்<br>திண்டிவனம் வழியாக பண்ரூட்டி, நெய்வேலி, வடலூார், சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் செல்லும் பேருந்துகள்<br>மற்றும் திண்டிவனம் வழியாக புதுச்சேரி, கடலூர், சிதம்பரம் செல்லும் பேருந்துகள் |
| 4. | பூந்தமல்லி பேருந்து நிலையம் | வேலூர், ஆரணி, ஆற்காடு, திருப்பத்தூர், காஞ்சிபுரம், செய்யாறு , ஓசூர் செல்லும் பேருந்துகள் மற்றும் திருத்தணி வழியாக திருப்பதி செல்லும் பேருந்துகள் |
| 5. | புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம் கோயம்பேடு | மேற்குறிப்பிட்டுள்ள ஊர்களைத்தவிர இதர ஊர்களுக்கு செல்லும் பேருந்துகள் (மயிலாடுதுறை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, செங்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர், நாகர்கோவில், கன்னியாகுமரி, திருவனந்தபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காரைக்குடி, புதுக்கோட்டை, திண்டுக்கல், விருதுநகர், திருப்பூர், ஈரோடு, ஊட்டி, இராமநாதபுரம், சேலம், கோயம்புத்தூர், எர்ணாகுளம் மற்றும் பெங்களூர்) |

மேலும், ஆயுதபூஜை முடிந்த பின்பு 08.10.2019 முதல் 09.10.2019 வரை, பிற ஊர்களிலிருந்து திருப்பூருக்கு 266 பேருந்துகளும், பிற ஊர்களிலிருந்து கோயம்புத்தூருக்கு 490 பேருந்துகளும், பிற ஊர்களிலிருந்து பெங்களூருக்கு 237 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

**தீபாவளி –2019 – சிறப்பு பேருந்துகள் இயக்கம்**

**தீபாவளி திருநாளை முன்னிட்டு சென்னையிலிருந்து பின்வரும் பேருந்து நிலையங்களிலிருந்து பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்த ஆண்டு சிறப்பு ஏற்பாடாக தாம்பரம் இரயில் நிலைய பேருந்து நிறுத்தம் மற்றும் தாம்பரம் மாநகர போக்குவரத்துக் கழக இரயில் நிலைய பேருந்து நிறுத்தம் ஆகிய இரண்டு இடங்களிலிருந்து இயக்கப்படுகின்றன. மேலும், திருத்தணி வழியாக திருப்பதி செல்லும் பேருந்துகள் பூந்தமல்லி பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படும்.**

**(24/10/2019 முதல் 26/10/2019 வரை)**

| வ.எண் | பேருந்து நிலையம் | இயக்கப்படும் பேருந்துகள் |
|---|---|---|
| 1. | மாதவரம் புதிய பேருந்து நிலையம் | ஆந்திரா மார்க்கம் செல்லும் பேருந்துகள் |
| 2. | கே.கே. நகர் மாநகர போக்குவரத்துக் கழக பேருந்து நிலையம் | ECR வழியாக புதுச்சேரி, கடலூர் மற்றும் சிதம்பரம் செல்லும் பேருந்துகள். |
| 3. அ) | தாம்பரம் அறிஞர் அண்ணா பேருந்துநிலையம் (MEPZ) | திண்டிவனம் வழியாக கும்பகோணம், தஞ்சாவூர் செல்லும் பேருந்துகள். |
| ஆ) | தாம்பரம் இரயில் நிலையப் பேருந்து நிறுத்தம் | திண்டிவனம் மார்க்கமாக திருவண்ணாமலை செல்லும் பேருந்துகள் மற்றும் போளூர், சேத்பட்டு, வந்தவாசி, செஞ்சி மார்க்கமாக செல்லும் பேருந்துகள்<br>திண்டிவனம் வழியாக பண்ரூட்டி, நெய்வேலி, வடலூர், சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் செல்லும் பேருந்துகள்<br>திண்டிவனம் வழியாக புதுச்சேரி, கடலூர், சிதம்பரம் செல்லும் பேருந்துகள் |
| 4. | பூந்தமல்லி பேருந்து நிலையம் | வேலூர், ஆரணி, ஆற்காடு, திருப்பத்தூர், காஞ்சிபுரம், செய்யாறு, ஒசூர் செல்லும் பேருந்துகள் மற்றும் திருத்தணி வழியாக திருப்பதி செல்லும் பேருந்துகள் |
| 5. | புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம், கோயம்பேடு | மேற்குறிப்பிட்டுள்ள ஊர்களைத்தவிர இதர ஊர்களுக்கு செல்லும் பேருந்துகள் (மயிலாடுதுறை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, செங்கோட்டை, தூத்துக்குடி, திருச்செந்தூர், நாகர்கோவில், கன்னியாகுமரி, திருவனந்தபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காரைக்குடி, புதுக்கோட்டை, திண்டுக்கல், விருதுநகர், திருப்பூர், ஈரோடு, ஊட்டி, இராமநாதபுரம், சேலம், கோயம்புத்தூர், எர்ணாகுளம் மற்றும் பெங்களூர்) |
| | | |

**<u>வழித்தட மாற்றம்</u>**

பேருந்துகளில் முன்பதிவு செய்துள்ள பயணிகள் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையம், கோயம்பேட்டிலிருந்து புறப்பட்டு பூந்தமல்லி, நாசரத்பேட்டை, அவுட்டர் ரிங்ரோடு வழியாக வண்டலூர் சென்றடைந்து ஊரப்பாக்கம் தற்காலிக பேருந்து நிறுத்தத்திற்கு சென்று தாம்பரம் மற்றும் பெருங்களத்துாரிலிருந்து பயணம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**முன்பதிவு சிறப்பு மையங்கள் செயல்படும் நாட்கள் (23/10/2019 முதல் 26/10/2019 வரை)**

<table>
<tr><th>பேருந்து நிலையங்கள்</th><th>முன்பதிவு மையங்கள்</th><th></th></tr>
<tr><td>கோயம்பேடு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம்</td><td>26</td><td></td></tr>
<tr><td>MEPZ (தாம்பரம் சானிடோரியம்)</td><td>02</td><td rowspan="4">03.10.2019 முதல் முன்பதிவு வசதி</td></tr>
<tr><td>பூவிருந்தவல்லி பேருந்து நிலையம்</td><td>01</td></tr>
<tr><td>மாதவரம் புதிய பேருந்து நிலையம்</td><td>01</td></tr>
<tr><td>சாலைப் போக்குவரத்து நிறுவனம் (Institute of Road Transport), தரமணி</td><td>01</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>31</td><td></td></tr>
</table>

இன்றைய கூட்டத்தில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், பொதுமக்களின் வசதிக்காக தாம்பரம் சானிட்டோரியம் (மெப்ஸ்), பூவிருந்தவல்லி மற்றும் மாதாவரம் ஆகிய பேருந்து நிலையங்களில் செயல்படும் சிறப்பு முன்பதிவு மையங்களில் வரும் 03.10.2019 முதல் முன்பதிவு தொடங்கிட ஆவன செய்யுமாறு உத்தரவிட்டார்.

தீபாவளி பண்டிகை முடிந்து பிற ஊர்களிலிருந்து சென்னைக்கு 27/10/2019 முதல் 30/10/2019 வரை 4627 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். மேலும் தீபாவளிப் பண்டிகை முடிந்து ஏனைய பிற முக்கிய ஊர்களிலிருந்து பல்வேறு ஊர்களுக்கு 6,921 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். மேலும் தீபாவளிக்கு பின்பு சேலம், மதுரை, திருச்சி, தேனி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து திருப்பூர் மற்றும் கோயம்புத்துாருக்கு சிறப்பு பேருந்துகள் முறையே 570 மற்றும் 925 பேருந்துகள் இயக்கப்படும். தீபாவளி பண்டிகை பின்பு சேலம், திருவண்ணாமலை, வேலுார், சென்னை, கரூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து பெங்களூருக்கு 221 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும்.

## முன்பதிவு வசதி

பயணிகள் முன்பதிவு செய்து கொள்ள, நடைமுறையில் உள்ள அரசு போக்குவரத்துக் கழக இணையதள வசதியான **www.tnstc.in** உடன் **www.redbus.in, www.paytm.com** மற்றும் **www.busindia.com** போன்ற இணையதளங்கள் மூலமாகவும் முன்பதிவு செய்துகொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கோயம்பேடு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலையத்தில் முன்பதிவு கவுண்டர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மேலும், காஞ்சிபுரம் அத்திவரதர் வைபவத்தில் சிறந்த முறையில் பணியாற்றிய விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த, அலுவலர் உட்பட 208 பணியாளர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கையொப்பமிட்ட பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (01.10.2019) தலைமைச் செயலகத்தில், அலுவலர் உட்பட 18 பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர், டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை ஆணையர் திரு. சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., இணை ஆணையர் (சென்னை தெற்கு) திரு.எழிலரசன், இ.கா.ப., உள்ளிட்ட உயர் அலுவலர்கள் மற்றும் அனைத்து போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**